**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.2052/2022 P.W.4**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | ராஜேந்திரன் | த-பெ | சண்முகம் |
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 57/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | கொட்டகை வேலை | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **17.02.2026**

**எதிரி ஆஜர்.**

---

<u>முதல் விசாரணை.</u>

1. நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து கொட்டகை வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். **கையொப்பம் அசாஆ 4.** மற்றொரு ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. 15.02.2018 அன்று நான் பேசும்தெய்வம் காமாட்சியம்மன் கோவிலில் விளக்கு மற்றும் சட்டி பானைகள் திருடுபோயிருந்தது. அது தொடர்பாக மறுநாள் காவல் நிலையத்திற்கு மனு கொடுப்பதற்காக வடக்கு காவல் நிலையம் சென்றிருந்தோம். அங்கு ஒரு குற்றவாளியை பிடித்து வைத்திருந்தார்கள். அவர் விசாரணையில் தான் தான் திருடினேன் என்று ஒப்புக்கொண்டார். அப்போது போலீசார் தயார் செய்த ஆவணத்தில் நான் கையொப்பம் செய்தேன்.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக கருதக்கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

போலீசார் விசாரணையில் 16.02.2018 அன்று 12.45 மணிக்கு ஆஜர் எதிரியானவரை வடக்கு போலீசார் விசாரணை செய்து கொண்டிருந்ததாகவும் அவர் எவ்வித தூண்டுதலும் இன்றி தன்னிச்சையாக ஸ்ரீ காமாட்சியம்மன் கோவிலில் வழக்கு சொத்துகளை திருடியதாக குற்றத்தை ஒப்புக்கொண்டு

தன்னிச்சையாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்ததாகவும் மேலும் அன்றைய தினம் 14.00 மணிக்கு வழக்கின் சம்பவ இடம் சென்று மேற்படி வழக்கு சொத்தை எதிரியின் வீட்டில் இருந்து கைப்பற்றியபோது போலீசார் தயார் செய்த ஆவணத்தில் கையொப்பம் செய்துவிட்டு தற்போது காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்று பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.02.18 15:57:13 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

காரைக்குடி.

# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## C.C. No.2052/2022 P.W.3

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | கருப்பையா | த-பெ | கிருஷ்ணன் |
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 66/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | கட்டிட வேலை | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **17.02.2026**

**எதிரி ஆஜர்.**

-------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

1. நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து கட்டிட வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். **கையொப்பம் அசாஆ 3**. 16.02.2018 அன்று நேரம் நினைவில் இல்லை. நான் பேசும்தெய்வம் காமாட்சியம்மன் கோவிலில் சென்று கொண்டிருந்தபோது விசாரணை செய்து கொண்டிருந்தார்கள். விசாரணையில் ஒரு விளக்கு ஒன்று காணவில்லை என்றும் அது தொடர்பாக விசாரணை செய்து அங்கு அவர்கள் தயார் செய்த ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம்செய்தேன்.

குறுக்கு விசாரணை

1. பொருள் காணாமல் போன விபரம் கேள்வி பட்டு தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். புகார் கொடுக்க நான் காவல் நிலையம் செல்லவில்லை என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் தெரியுமா என்றால் நியாபகம் இல்லை. போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். என் முன்னால் எழுதிய ஆவணத்தில் கையொப்பம் செய்தேனா என்றால் எழுதியிருந்த ஆவணத்தில் கையொப்பம் செய்தேன். தட்டச்சு செய்த ஆவணத்தில் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.02.18 15:57:20 +0530